இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 217 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – பங்குனி 05 – திங்கள்கிழமை 18 மார்ச் 2024 – மதுரை 12+12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 217 : Thiruvalluvar Year - 2055 - Panguni 05 - Monday 18 March 2024 - Madurai 12+12 Pages ₹ 5.00

### குஜராத்தை மறைத்துவிட்டு - போதைப்பொருள் நடமாட்டம் குறித்து இங்கு அ.தி.மு.க. - பா.ஜ.க. அரசியல் நாடகம்!

# தேர்தல் பத்திர ஊழல்: பா.ஜ.க. முகத்திரை கிழிப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ‘DT Next’ ஆங்கில இதழுக்கு அளித்த சிறப்புப் பேட்டியில் கடும் குற்றச்சாட்டு!

**சென்னை, மார்ச் 18-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் ‘DT Next’ ஆங்கில இதழுக்கு சிறப்புப் பேட்டி அளித்துள்ளார். முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அளித்துள்ள அப்பேட்டியில், “தேர்தல் பத்திர ஊழல் பா.ஜ.க.வின் முகத்திரையை கிழித்துள்ளது” என்றும் “குஜராத்தை மறைத்து போதைப் பொருள் நடமாட்டம் குறித்து இங்கு அ.தி.மு.க. - பா.ஜ.க. அரசியல் நாடகம் நடத்துகிறார்கள்” என்றும் குற்றம்சாட்டியுள்ளார்.**



நேற்றைய (17.3.2024) DT Next ஆங்கில நாளேட்டில் வெளியாகியுள்ள கழகத் தலைவர் -முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சிறப்புப் பேட்டி வருமாறு:-

**கேள்வி:-** வாக்குறுதி அளித்த பல திட்டங்களைக் கடந்த மூன்றாண்டுகளில் உங்களது அரசு நிறைவேற்றியுள்ளது. சொல்லாதவற்றையும் செய்துள்ளது. இதில் உங்களுக்கு நெருக்கமான திட்டம் என்ன? உங்கள் ஆட்சிக்காலத்தின் ஏற்ற இறக்கங்களாக நீங்கள் எதைப் பார்க்கிறீர்கள்?

முதல்வர் மு.க.ஸ்டாலின் :- **ஒரு தாய்க்கு தனது எல்லாக் குழந்தைகளும் சிறந்த குழந்தைகள்தான். அது போல், எனது அனைத்துத் திட்டங்களும் சிறப்பான திட்டங்கள்தான். முக்கியமான திட்டங்கள் தான். முதலமைச்சராகப் பொறுப்பேற்றதும் முதல் கையெழுத்துப் போட்டது விடியல் பயணம் திட்டத்துக்காக. நகரப் பேருந்துகளில் மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்து வசதியை ஏற்படுத்தித் தந்தது கோடிக்கணக்கான பெண்களுக்கு தினந்தோறும் பயனளித்து வருகிறது. மாதம் தோறும் 800 ரூபாய் வரை அவர்கள் சேமிக்கிறார்கள். இதைவிட முக்கியமாக, பெண்களின் சமூகப் பங்களிப்பு அதிகமாகி உள்ளது. அதேபோல் மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் மூலமாக 1.15 கோடி பெண்கள் பொருளாதாரச் சுதந்திரத்தைப் பெற்றுள்ளார்கள். நாங்கள் இதனை அறிவித்த போது, நிறைவேற்ற முடியாத வாக்குறுதி என்று எதிர்க்கட்சிகள் விமர்சித்தார்கள். மிகக்கடுமையான நிதி நெருக்கடி இருந்தாலும் மகளிருக்கு உரிமைத் தொகையை வழங்கியாக வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தேன்.**

### நான் முதல்வன் திட்டம் எனது கனவுத் திட்டம்!

**என்னுடைய கனவுத் திட்டம்தான், ‘நான் முதல்வன்’ திட்டம். படித்த இளைஞர்கள் அனைவர்க்கும் தனித்திறமையை ஏற்படுத்தி, அனைத்துப் பணிகளுக்கும் அவர்களைத் தகுதியானவர்களாக ஆக்கி வருகிறோம். அரசுப் பள்ளியில் படித்து விட்டு உயர்கல்வியை நோக்கி வரும் மாணவியர்க்கு ஆயிரம் ரூபாய் வழங்கும் புதுமைப் பெண் திட்டம் மாணவியர் மத்தியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. மாணவியர்க்கு மட்டும் தானா, மாணவர்க்கு இல்லையா என்ற கோரிக்கையை ஏற்று, ‘தமிழ்ப்புதல்வன்’ என்ற பெயரில் மாணவர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.**

**மதிய உணவுத் திட்டத்தை இன்னும் விரிவுபடுத்தும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தொடங்கி வைத்துள்ளோம். 17 லட்சம் பிள்ளைகள் தினமும் காலையில் வயிறார உணவு உண்ட பிறகு கல்வி கற்கிறார்கள். இதனைப் பார்க்கும் போது என் மனம் நிறைகிறது.**

**கேள்வி:-** முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் போல. தேர்தல் அறிக்கையில் சொல்லப்படாத மேலும் பல திட்டங்களை மீதமுள்ள உங்கள் ஆட்சிக்காலத்தில் எதிர்பார்க்கலாமா?

முதல்வர் மு.க.ஸ்டாலின் : - **தமிழ்நாட்டின் நிதிநிலையை அதலபாதாளத்தில் விட்டுச் சென்றது முந்தைய அ.தி.மு.க. அரசு. தி.மு.க. ஆட்சிக்கு வந்த மூன்றாண்டு காலத்தில் அதனை இயன்ற அளவில் சரிப்படுத்தி, மேம்படுத்தி வருகிறோம். எனினும், தமிழ்நாட்டிற்குரிய வரிப்பங்கீடு, திட்டங்களுக்கான ஒதுக்கீடு உள்ளிட்டவற்றில் ஒன்றிய பா.ஜ.க. அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் பாரபட்சமாக நடந்து கொள்கிறது. அதனால், தொடர்ந்து கடும் நிதி நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அப்படிப்பட்ட சூழலிலும் மக்கள் நலன் காக்கும் காலை உணவுத் திட்டம் போன்ற திட்டங்களையும், ஒவ்வொரு மாவட்டத்திற்கான கட்டமைப்பு வசதிகளையும் உருவாக்கிச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். 2024 மே மாதத்திற்குப் பிறகு, நிதிநிலைமை சீராகும் சூழல் என்ற நம்பிக்கை இருக்கிறது. மக்களுக்கான புதிய திட்டங்கள் தொடரும். இன்னும் பல திட்டங்கள் வர இருக்கின்றன.**



**கேள்வி:** கூட்டணியில் இருந்து சில கட்சிகள் வெளியேறிய நிலையில் ராகுல் காந்தி பாரத் ஜோடோ நியாய் யாத்திரையைத் தொடர்ந்ததைச் சிலர் விமர்சிக்கிறார்களே?

**முதல்வர் மு.க.ஸ்டாலின் :- ராகுல் காந்தி இந்தியாவின் நம்பிக்கைக்குரிய தலைவராக உள்ளார். அரசியல் மட்டுமல்ல சமூகக் கருத்துகளையும் துணிச்சலாக அவர் வெளிப்படுத்தி வருகிறார். களத்தில் அவருடைய பங்களிப்பு நிறைய தேவைப்படும்.**

### எந்தத் திட்டத்திற்கும் உரிய நிதியை ஒன்றிய அரசு தருவதில்லை!

**கேள்வி:-** சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள், வெள்ள நிவாரணப் பணிகளுக்கு நிதி ஒதுக்காதது மாநில அரசுக்கு நிதி நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. ஒன்றிய அரசின் இந்த அணுகுமுறை புதிய திட்டங்களைத் தீட்ட விடாமலும், இருக்கும் திட்டங்களைத் தக்க வைக்க முடியாமலும் மாநில அரசின் திறனைப் பாதிக்கிறதா?

முதல்வர் மு.க.ஸ்டாலின்:- **ஒன்றியத்தில் பா.ஜ.க. ஆட்சி செய்யும் கடந்த பத்தாண்டுகளில் தமிழ்நாடு உள்பட பல மாநிலங்களின் அடிப்படை உரிமைகளும், நிதி ஆதாரங்களும் பறிக்கப்பட்டிருக்கின்றன. முந்தைய அ.தி.மு.க. ஆட்சியாளர்கள் தங்கள் பதவிகளைக் காப்பாற்றிக் கொள்வதற்காக உதய் மின் திட்டம், நீட் தேர்வு நுழைவு என ஒன்றிய பா.ஜ.க. அரசின் மேலாதிக்கப் போக்கிற்கு அடிபணிந்து விட்டார்கள். இதன் காரணமாக மாநிலத்தின் நிதி நிலைமையும் கடும் பாதிப்புக்குள்ளானது. ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு அதனைச் சீர்ப்படுத்தி வருகிறோம்.**

**மெட்ரோ ரயில் திட்டம், வெள்ளப் பேரிடர் உள்ளிட்ட எதற்கும் ஒன்றிய அரசு உரிய நிதி ஒதுக்குவதில்லை. எனினும், தமிழ்நாட்டு மக்களைப் பாதுகாக்கவும் அவர்களுக்கு உரிய கட்டமைப்புகளை உருவாக்கித் தரவும் உரிய நடவடிக்கைகளை எடுத்து, அதற்கான நிதிஆதாரங்களைத் திரட்டி, திட்டங்களைச் செயல்படுத்துவது தொடரும்.**

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

### ராகுல்காந்தியின் “இந்திய நீதிப் பயணம்” நிறைவு!

# மும்பையில் பொதுக் கூட்டம் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்!

## மும்பை வருகை தந்த முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

*மும்பை, மார்ச் 18 -*

*ராகுல் காந்தியின் ‘இந்திய நீதி பயணம்’, மும்பையில் நேற்று நிறைவடைந்தது.*

*நேற்று மாலை நடைபெற்ற பிரம்மாண்ட பொதுக்கூட்டத்தில், மல்லிகார்ஜுன கார்கே, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றினர்.*

*முன்னதாக இக்கூட்டத்தில் பங்கேற்றிட வருகை தந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மும்பை விமான நிலையத்தில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.*

*ராகுல் காந்தி தனது 2 வது கட்ட இந்திய ஒற்றுமை நீதிப் பயணத்தை கடந்த ஜனவரி 14ம் தேதி மணிப்பூரில் தொடங்கினார். 15 மாநிலங்கள் வழியாக 6 ஆயிரத்து 700 கிலோ மீட்டர் தூரத்திற்கு அவர் மேற்கொண்ட பயணம் மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. மும்பை தாதரில் உள்ள அம்பேத்கர் நினைவிடத்தில் ராகுல் காந்தி நேற்று தனது பயணத்தை நிறைவு செய்தார். இதனையொட்டி இந்தியா கூட்டணிக் கட்சிகள் சார்பில் மும்பையில் நேற்று மாலை பிரம்மாண்ட பொதுக்கூட்டம் நடைபெற்றது.*

*இக்கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.*

*மேலும் சரத்பவார், உத்தவ் தாக்கரே, அகிலேஷ் யாதவ், தேஜஸ்வி யாதவ் உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.*

*முன்னதாக பங்கேற்பதற்காக வருகை தந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மும்பை விமான நிலையத்தில் ஏராளமான தி.மு.க. மற்றும் ‘இந்தியா கூட்டணி’ கட்சியினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.*

